**ஏக்கருக்கு `1,00,000 மகத்தான லாபம் தரும் மஞ்சள், வெங்காயம், முருங்கை**



ஊடுபயிர் வருமானம் என்பது, 'விவசாயிகளுக்குக் கிடைக்கும் ஊக்கத் தொ" என்றே சொல்லலாம் அதனால்தான் ஒவ்வொரு பயிருக்கும் இடையில், ஏற்றதொரு ஊடுபயிரை சாகுபடி செய்து வருகிறார்கள் விவசாயிகள். அந்த வகையில் தென்னைக்கு இடையில் மஞ்சள் மற்றும் செடிமுருங்கை ஆகியவற்றை சாகுபடி செய்து, அசத்தலான லாபம் பார்த்து வருகிறார் கோயம்புத்தூர் மாவட்டம் சிறுவாணி அருகே உள்ள வலையன்குட்டை இளங்கோவன்.

கோயம்புத்தூரிலிருந்து சிறுவாணி செல்லும் பிராதான சாலையில், 25வது கிலோ மீட்டரில், இடதுபக்கம் பிரிந்து செல்லும் கிளைச்சாலையில் பயணித்தால் இரண்டாவது கிலோ மீட்டரில் நம்மை எதிர் கொள்கிறது. இயற்கை எழில் சூழ்ந்த வலையன்குட்டை, அந்திவானம் ஆரஞ்சு வண்ணத்தை ஆடையாக உடுத்திக் கொண்டிருந்த அழகான மாலை நேரத்தில், தனது தோட்டத்தில் இருந்தபடி நம்மை எதிர்கொண்ட இளங்கோவன், பேச்சை ஆரம்பித்தார்.

"கிணத்துப் பாசனத்துல மொத்தம் ஏழு ஏக்கர் நிலம் இருக்கு. அதுல மூன்றரை ஏக்கர்ல தேங்காய்க்கான தென்னை, அரை ஏக்கர்ல இளநிக்கான தென்னைனு

மொத்தம் நாலு ஏக்கர்ல தென்னை இருக்குது. இதுல ரெண்டு ஏக்கர்ல மஞ்சள், வெங்காயம் இது ரெண்டையும் ஊடுபயிரா விதைச்சேன். அரை ஏக்கர்ல மஞ்சள், வெங்காயம், முருங்கை இது மூணையும் ஊடுபயிரா விதைச்சேன். மஞ்சள், வெங்காயம் அறுவடை முடிஞ்சிருச்சு. செடி முருங்கை காய்ப்புல இருக்கு. தென்னை நடவு செஞ்சது போக மீதியுள்ள 3 ஏக்கர்ல ஜி-9 திசு வாழையை ஜீரோ பட்ஜெட் முறையில சாகுபடி செஞ்சிருக்கேன என்று முன்னோட்டம் கொடுத்தவர்,

“பி.எஸ்.என்.எல். நிறுவனத்துல வேலையில இருந்த நான், விவசாயத்தையும் கூடவே கவனிச்சுக்கிட்டிருந்தேன். ‘பசுமை விகடன்’ நடத்தின ஜீரோ பட்ஜெட் பயிற்சி, நம்மாழ்வாரோட களப்பயிற்சி இதுலயெல்லாம் கலந்துக்கிட்டேன். அதுக்குப் பிறகு, விருப்பு ஓய்வு வாங்கிட்டு, முழுநேர இயற்கை விவசாயியா மாறிட்டேன்” என்று தன்னைப் பற்றியும் கொஞ்சம் சொல்லிவிட்டு, மஞ்சள், வெங்காயம் மற்றும் செடிமுருங்கை ஆகியவற்றை ஊடுபயிராக சாகுபடி செய்யம் முறைகளைச் சொல்லத் தொடங்கினார். அது, பாடமாகத் தொகுக்கப்பட்டுள்ளது.

**ஒரு அடி இடைவெளி அவசியம்** ‘குறைந்தபட்சம் 25 அடி இடைவெளியில்

**இரண்டரை ஏக்கர் தென்னைக்கு இடையில் மஞ்சள், வெங்காயம் மற்றும் செடிமுருங்கை சாகுபடி செய்ய செலவு, வரவு கணக்கு**

| விவரம் | செலவு | வரவு |
|---|---|---|
| உழவு | 6,000 | |
| தொழுவுரம் | 20,000 | |
| கோழி எரு | 15,000 | |
| இறைப்பு | 4,000 | |
| பார் கட்ட | 4,000 | |

| | | |
|---|---|---|
| விதைமஞ்சள்<br>1800 கிலோ X `40 | 72,000 | |
| நடவு | 12,000 | |
| களை | 10,000 | |
| ஜீவாமிர்தம் / தெளிப்பு | 2,000 | |
| பாசனம் | 8,000 | |
| அறுவடை/பாலீஷ் | 50,000 | |
| விதைவெங்காயம் 1500 கிலோ X ` 30 | 45,000 | |
| நடவு | 6,000 | |
| அறுவடை | 18,000 | |
| முருங்கை 150 கன்றுகள் X `10 | 1,500 | |
| நடவு | 400 | |
| கவாத்து | 400 | |
| அறுவடை | 500 | |
| மகசூல்: | | |
| வெங்காயம் 6 டன் X `16 | | 96,000 |
| முருங்கை 1500 கிலோ X ` 10 | | 15,000 |
| மஞ்சள் 50 குவி. X ` 9,000 | | 4,50,000 |
| மொத்தம் | 2,74,800 | 5,61,000 |
| நிகரலாபம் | | 2,86,200 |

நடவு செய்து, நான்கு ஆண்டுகளுக்கும் குறைவான வயதிலிருக்கும் இளம் தென்னைகள் உள்ள தோப்புகள் தான் மஞ்சள், வெங்காயம், முருங்கை போன்ற ஊடுபயிர்களை சாகுபடி செய்வதற்கு ஏற்றவை. நிலத்தை நன்றாக உழவு செய்து, முக்கால் அடி அகலத்துக்கு பார் எடுக்க வேண்டும். பாருக்குப் பார் ஒன்றரை அடி இடைவெளி இருக்க வேண்டம். நன்கு உலர்த்தி வைக்கப்பட்ட நாட்டு ரக மஞ்சள் விதைக் கிழங்குகளை, ஒவ்வொரு பாரிலும் ஓர் அடி இடைவெளியல் (வழக்கமாக முக்கால் அடி இடைவெளிதான் கொடுப்பார்கள். மஞ்சளுக்கு இடையே ஊடுபயிர் செய்வதால், ஓர் அடி இடைவெளி விடவேண்டும்) ஈர நடவு செய்ய வேண்டும். ஏக்கருக்கு 700 கிலோ விதைக் கிழங்கு தேவைப்படும்.

மஞ்சளை நட்ட பின்பு, அதே பாரில் ஈர நடவு முறையில் 12 அடி இடைவெளியில் செடிமுருங்கை நாற்றுகளை நடவு ெய்ய வேண்டும். ஏக்கருக்கு கூமார் 300 செடிகள் வரை தேவைப்படும். (இவர் அரை ஏக்கரில் 150 செடிகளை நடவு செய்துள்ளார்). பிறகு, விதை வெங்காயத்தை வாய்க்கால் கரைகளில் நடவு செய்ய வேண்டும். ஏக்கருக்கு 600 கிலோ தேவைப்படும்.

**புழுவை அழிக்க உதவும் பூக்கள்:**

தொடர்ந்து 200 லிட்டர் ஜீவாமிர்தக் கரைசலை 15 நாளுக்கு ஒரு முறை பாசன வாய்க்கால் மூலம் கொடுக்க வேண்டும். இடையிடையே சூரியகாந்தி மற்றும் செண்டுமல்லி விதைகளையும் பரவலாக விதைக்க வேண்டும். செண்டுமல்லிச் செடியின் வேரில் சுரக்கும் திரவம் நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தும்.

சூரியாகாந்தி விதையை உண்ண வரும் பறவைகள் புழு, பூச்சிகளைப் பிடித்து தின்றுவிடும். 60-ம் நாளுக்கு மேல் ஏக்கருக்கு 200 லிட்டர் ஜீவாமிர்தத்தைச் செடிகளின் மேல் தெளித்தால், இலைப்புள்ளி நோய் கட்டுப்படும். 70-ம் நாள் வெங்காயம்

அறுவடைக்கு வந்துவிடும். மஞ்சளுக்கு இடையில் ஊடுபயிராகச் செய்யும் போது, ஏக்கருக்கு 2,000 முதல் 2,5000 கிலோ வரை வெங்காயத்தில் மகசூல் கிடைக்கும்.

100-ம் நாள், 100 லிட்டர் தண்ணீரில் இரண்டரை லிட்டர் பிரம்மாஸ்திரம், 3 லிட்டர் மாட்டுச் சிறுநீர் ஆகியவற்றைக் கலந்து தெளிக்க வேண்டும். 150ம் நாளுக்கு மேல் 100 லிட்டர் தண்ணீரில் இரண்டரை லிட்டர் அக்னி அஸ்திரம், 3 லிட்டர் மாட்டுச் சிறுநீர் ஆகியவற்றைக் கலந்து தெளிக்க வேண்டும்.

**20 குவிண்டால்:**

நடவு செய்த எட்டாம் மாதத்துக்கு மேல் மஞ்சளை அறுவடை செய்யலாம். அவற்றை தரம் பிரித்து சுத்தப்படுத்தி, வேகவைத்து உலர்த்தி, இயந்திரத்தின் மூலம் பாலீஷ் செய்ய வேண்டும். பிறகு, மூட்டை பிடித்து விற்பனை செய்யலாம். ஊடுபயிராக சாகுபடி செய்துள்ளதால், குறைந்த பட்சம் ஏக்கருக்கு 20 குவிண்டால் மகசூல் கிடைக்கும்.செடி முருங்கையைப் பொறுத்தவரை தனியாக எந்தப் பராமரிப்பும் செய்யத் தேவையில்லை. நடவு செய்த 8-ம் மாதம் முதல் மகசூல் கொடுக்கத் தொடங்கி, தொடர்ந்து 4 மாதம் காய்த்துக் கொண்டிருக்கும். மஞ்சளுக்கு ஊடுபயிராக செடிமுருங்கையை நடும்போது குறைந்தபட்சம் ஏக்கருக்கு 3,000 கிலோ காய்கள் கிடைக்கும்.

**ஏக்கருக்கு 1,00,000:**

சாகுபடி பாடம் முடிந்த பிறகு, வருமானத்தைப் பற்றி பேசிய இளங்கோவன், "ரெண்டரை ஏக்கர்ல விதைச்ச வெங்காயம் மூலமா 6,000 கிலோ மகசூல் கிடைச்சுது. கிலோ 16 ரூபாய் வீதம் வித்ததுல 96,000 ரூபாய் கிடைச்சுது. மொத்தம் 50 குவிண்டால் மஞ்சள் கிடைச்சிருக்கு. இப்ப விலை குறைச்சலா இருக்கறதால், இன்னும் விக்காம வெச்சிருக்கேன். சராசரியா ஒரு குவிண்டால் 9 ஆயிரத்துக்கு வித்தாலும்,

4,50,000 கிடைக்கும்.          அரை ஏக்கர் முருங்கையில் இருந்து இது வரைக்கும் 700 கிலோ முருங்கை எடுத்திருக்கேன். இன்னும் 800 கிலோ கிடைக்கும்னு எதிர் பார்க்குறேன். மொத்தம் 1,500 கிலோனு வெச்சிக்கிட்டா 15,000 ரூபாய் கிடைக்கும்.

கூட்டிக் கழிச்சி பார்த்தா... தொழுவுரம், கோழி, எரு, ஜீவாமிர்தம் தவிர எதையும் பயன்படுத்தாம, தென்னைக்கு இடையில் ஊடுபயிர் மூலமாகவே ஏக்கருக்கு ஒரு லட்ச ரூபாய்க்கு மேல லாபம் பாக்கலாம்" என்றார்.

**தொடர்புக்கு:**

இளங்கோவன், அலைபேசி: 94433-51500

---

**ஆதாரம்:** பசுமை விகடன் வெளியீடு 10.06.11 www.vikatan.com